DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.87/2019**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கிருஷ்ணன் | Caste: | |
| Father's Name: | வளத்தியப்பன் | Calling: | விவசாயம் |
| Village: | மூவலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 67 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 10.10.2025

( 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா மூவலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.7 சண்முகநாதனை தெரியும். அ.சா.1 பிரபுவை தெரியும். எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5.** என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6**. நான் மூவலூர் கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்ததால் அடிக்கடி காவல்நிலையத்திற்கு செல்வேன் . அப்போது ஏதாவது கையெழுத்து கேட்டால் போட்டு கொடுப்பேன். எதற்காக கையெழுத்து போட்டேன் என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 19.01.2019 ம் தேதி நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த சண்முகநாதனும் நயினார்கோவில் பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது பரமக்குடி உட்கோட்ட காவல்துணைகண்காணிப்பாளர் அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்த காளிஸ்வரனையும் கார்செல்வத்தையும் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவுள்ளார்கள் என்றும் அதற்கு சாட்சியாக என்னையும் சண்முகநாதனையும் இருக்க கேட்டுக்கொண்டதன்பேரில் எங்கள் முன்னிலையில் காளிஸ்வரன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக அவர் அவரது வீட்டிற்கு அழைத்து சென்று வீட்டின் பின்புறம் எங்கள் ஊரை சேர்ந்த பிரபுவை குத்த பயன்படுத்திய கத்தியை 9.45 மணிக்கு எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அப்போது ஒரு அத்தாட்சி தயார் செய்தார் என்றும், அதற்கு சாட்சியாக டிஎஸ்பி தயாரித்த அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தயதாகவும் கடந்த 20.01.2019 ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் எனது சாதியை சேர்ந்தவர்கள் என்பதாலும் நான் பஞ்சாயத்து தலைவராக இருப்பதால் அவர்களின் தயவு தேவை

என்பதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)